நாகப்பட்டினம் முதன்மைக்கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்

முன்னிலை: திரு.மா.இரவிச்சந்திரன் ,எம்.எஸ்சி.,பி.எட்.,எ.பில்.

ப.மு.எண்.6523/அ1/2025, நாள். 05.11.2025.

பொருள்: பள்ளிக்கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நாகப்பட்டினம் மாவட்டம் – 24.07.2022 அன்று நடைபெற்ற TNPSC தொகுதி IV தேர்வு மூலம் நேரடி நியமனம் – சிறுதலைக்காடு ,அரசு உயர்நிலைப்பள்ளி, இளநிலை உதவியாளர் திரு.வெ.இராமஜெயம் என்பாருக்கு - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக்கல்வி( ப.க1(1))த்துறை, நாள். 09.09.2022.
2. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்கக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.56703/அ4/இ3/2023, நாள். 21.09.2023.
3. நாகப்பட்டினம் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.05882/அ1/2023, நாள். 27.09.2023.
4. சிறுதலைக்காடு ,அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியரின் கடித ந.க.எண்.06/2025-2026, நாள். 17.06.2025.
5. நாகப்பட்டினம் மாவட்டக்கல்வி அலுவலரின்(இடைநிலை) கடித ந.க.எண்.2835/அ1/2025, நாள். 08.10.2025.

.......

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்டம், சிறுதலைக்காடு ,அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்துவரும் திரு.வெ.இராமஜெயம் என்பவருக்கு பார்வை 2 இல் கண்ட செயல்முறைகளின்படி 24.07.2022 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தொகுதி நான்கு தேர்வு மூலம் தேர்வுசெய்யப்பட்டு பார்வை 3 இல் கண்ட செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நேரடி நியமனம் மூலம் நியமன ஆணை வழங்கப்பட்டு 04.10.2023 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளரின் பணிவரன்முறை குறித்த கருத்துருக்கள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டது.

பார்வை 01 இல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய நியமன அலுவலராக முதன்மைக்கல்வி அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வின் அடிப்படையிலும், சம்மந்தப்பட்ட பணியாளரின் கல்விச்சான்றுகள் மற்றும் இதர சான்றுகளின் உண்மைத்தன்மையின் அடிப்படையிலும் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் பதவியில் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

த.பி.பா.

| வ. எண் | பெயர் / பதவி / மற்றும் பணிபுரியும் பள்ளி | தேர்வாணைய பட்டியலின் வரிசை எண். | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 01. | திரு.வெ.இராமஜெயம், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, சிறுதலைக்காடு, நாகப்பட்டினம் மாவட்டம். | 419 | 04.10.2023 முற்பகல் | 04.10.2023 முற்பகல் |

1. இவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாள் முதல், மூன்றாண்டு தொடர்பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்தில் தகுதிகாண்பருவத்தினை முடிக்க வேண்டும். மேலும் தகுதிகாண் பருவம் நிறைவு செய்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படவேண்டும்.

2. ஈராண்டு காலத்தில் தமிழ்நாடு மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

3. தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

4. தனியர் அளித்துள்ள கல்விச்சான்றுகள் மற்றும் இதர சான்றுகள் உண்மைக்கு புறம்பானவை என கண்டறியப்பட்டால், எவ்வித முன்னறிவிப்புமின்றி பணியிலிருந்து நீக்கம் செய்து ஆணை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

5. பணிவரன்முறை தொடர்பான பதிவுகளை தொடர்புடையவரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இணைப்பு: அசல் பணிப்பதிவேடுI,
அசல் கல்விச்சான்றுகள்.

முதன்மைக்கல்வி அலுவலர்(பொ),
நாகப்பட்டினம்.

பெறுநர்: சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக),

நகல்: தலைமையாசிரியர்,அரசு உயர் நிலைப்பள்ளி, சிறுதலைக்காடு.

நகல்: மாவட்டக்கல்வி அலுவலர், (இடைநிலை), நாகப்பட்டினம்.

நகல்: அலுவலகக் கோப்பிற்கு.